★ மின்மாற்றிகளிலுள்ள ஒயில் திருட்டுத் தொடருமானால்

## மின்சார விநியோகம் முற்றுகத் தடைப்படலாம்

பலத்த சிரமத்தின் மத்தியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மின்சாரம் வழங்க வடபகுதி மின்சார சபை ஊழியர்கள் நடவடிக்கை எடுத்தும் அதனைச் சீராகப் பாவனையாளர்களுக்கு வழங்க முடியவில்லை என்று மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மினமாற்றிகளில் உள்ள ஒயில் களவாடப்படுவதே இதற்குக் காரணம். பல மின்மாற்றிகளில் இந்த ஒயில் திருடப்பட்டுவருவதால் ஆஸ்பத்திகளுக்கும் மின்சாரம் வழங்க முடியதுள்ளது. கடந்த காலங்களில் பல தடவைகள் மின்சாரம் தடைப்பட்டிருந்த போதிலும் மின்மாற்றிகளில் இருந்து ஒயில் திருடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பொதுமக்களாகவே உணர்ந்து இந்த மின்மாற்றி ஒயில்திருட்டுக்களைத்தடுக்காவிட்டால் இனிமேல் அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் அறவே கிடைக்காது போகலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (70 74)


பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 252 செவ்வாய் 23-10-1990 (ஐப்பசி 06) ந. ஆகிர் 03


# சீமெந்துதொழிற்சாலைசூழலில் தொடர்ந்தும் கடும் மோதல்

## வீமன்காமத்தில் முகாம் அமைக்க இராணுவம் எடுத்த முயற்சி முறியடிப்பு

**காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலைச் சுற்றாடலில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை வரை தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்றன.**

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையூடாக சீமெந்து ஆலைக்குச் சென்ற இராணுவ அணிமீது தச்சன்காட்டுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

வீமன்காமத்தில் கூடாரம் அடித்து தற்காலிக முகாம் அமைக்க முயன்ற மற்றொரு படைப்பிரிவு மீதும் புலிகள் தொடுத்த கடும் தாக்குதல்களால் படையினரின் முயற்சி கைகூடவில்லை.

இதேசமயம் வீமன்காமத்திலிருந்து தெற்கு நோக்கி தெல்லிப்பழையை அடைய ஒரு படைப்பிரிவு எடுத்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் போதனாவைத்தியசாலையில் மின் உபகரணங்கள் திருட்டு

யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள பல பெறுமதிமிக்க பொருட்கள் அண்மைக் காலங்களாக திருடப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல வார்ட்டுகளிலுள்ள மின்சார உபகரணங்கள் தற்பொழுது மாயமாக மறைந்துள்ளன. அத்துடன் சுவர்களில் பொருத்தப்பட்டிருந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சிலுவை வாகனம் மீது அவ்ரோ விமானம் தாக்குதல்

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தின் மீது சுண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் அவ்ரோ விமானத்தில் இருந்து இரு குண்டுகள் வீசப்பட்டன, ஆனால் எதுவித உயிரிழப்போ, சேதமோ நிகழவில்லை.

முல்லைத்தீவில் அகதிகளுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பும்போதே இச்சம்பவம் நிகழ்ந்தது. (ப-11)

## நேற்றுக்காலை கோப்பாயில் பொம்மர் தாக்கி ஒருவர் பலி

கோப்பாய்ச்சந்தியில் நேற்றுக் காலை 9 30மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தின. இதனால் ஓய்வு பெற்ற ஆசிரியரான சதாசிவம் வனாசித்தம்பி (65) ஸ்தலத்யிலேயே பலியானார். இவரது மனைவி மற்றும் ஓய்வு பெற்ற தபால் உத்தியோகஸ்தர் செல்லையா ஆகிய இருவரும் இத்தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலினால் கோப்பாய் கலாசார மண்டபம் சேதமடைந்துள்ளது. அருகிலுள்ள சித்திர வேலாயுத

—04 ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் வடக்குபகுதியில் விமானத்தாக்குதல் குறைவு

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்று ஓரளவு அமைதி நிலவியது. பாரிய விமானத் தாக்குதல்கள் எதுவும் நிகழவில்லை.

எனினும் தெல்லிப்பழைப் பகுதியில் நண்பகல் ஹெலிக்சுப்டர் தாக்குதல் இடம்பெற்றது.

பலாலிப்பகுதியில் ஷெல் தாக்குதல் சத்தங்கள் கேட்டன. மாவிட்டபுரம், கட்டுவன் பகுதியில் இடையிடையே வேட்டுச்சத்தங்கள் கேட்டன

இப்பகுதிகளில் பொது மக்களின் நடமாட்டம் ஓரளவுக்கு காணப்பட்டது. (ப10,70)

## வலது காலை இழந்தார்

யாழ்ப்பாணம் றீகல் தியேட்டக்ருகு அருகில் உள்ள புல்லுக்குளத்தில் நேற்றுக்காலை மீன்பிடிக்கச் சென்ற திட்டியைச் சேர்ந்த அந்தோனி (42) என்பவர் அங்கு வைக்கப்பட்ட மிதிவெடியில் சிக்கினார்.

இதனால் இவர் தனது வலது காலை முழங்காலுக்கு கிழே துடிக்கப்பட்ட நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ப 17-11)

## வான்தாக்குதல் மத்தியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் சேவை

வானத்தாக்குதல்களின் மத்தியிலும் மழையையும் பொருட்படுத்தாமல் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படுவதையிட்டு பலர் பாராட்டுத் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக நல்லூர், நீர்வேலி, சுன்னாகம், அச்சுவேலி, தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு ஆகிய கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் தமது மதிய போசனத்தையே மறந்து நாள்முழுதும் சேவை

—04 ஆம் பக்கம் பார்க்க

## சிகிரியாக் கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்தது

நேற்று மாலை 2 மணியளவில் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு சிகிரியாக் கப்பல் வந்தது.

இதில் யாழ் பிரதம தபாலகத்திற்கு 50 தபாற் பொதிகளும், 400 தொன் உலர் உணவுப் பொருள் உட்பட யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சொற்பளவு மருந்து வகைகளும், செஞ்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டியில் 50 குடும்பங்கள் இராணுவத்தால் சுற்றிவளைப்பு

தையிட்டி பழைய புத்த கோவிலடிப் பகுதியில் இருந்த பொதுமக்களில் சுமார் 50 பேர் வரை வெளியேற முடியாத நிலையில் அங்கேயே இருப்பதாகத் தெரிய வருகின்றது.

பலாலி இராணுவம் மாவிட்டபுரம் வீதி சாந்தை சந்தியூடாக திடீரென்று அப்பகுதிக்குள் நுழைந்ததால் இவர்கள் வெளியேற முடியாத நிலையில் உள்ளார்கள் எனக் கூறப்படுகின்றது.

இராணுவத்தால் இவர்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப10)

## பணியாளர்க்கு அழைப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விசார்ந்த கல்விசாராத பணியாளர்கள் அனைவரையும் எதிர் வரும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் குடாவுக்கு மண்ணெண்ணெய் எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டது

யாழ் மாவட்டத்திற்கு மண்ணெண்ணெய் கொண்டு வருவதற்குப் பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து வெற்றுப் பீப்பாக்களை அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் கொல்லன்னாவ பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு எடுத்துச் சென்று மண்ணெண்ணெயைஎடுத்துவருகின்றனர்.

மழை காலமானதால் தரைப்பாதையில் சில பிரச்சினைகள் இருப்பதால் போக்குவரத்துச் செலவும் அதிகரிக்கிறதாக இந்த விநியோகஸ்தர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை கிளிநொச்சியில் மண்ணெண்ணெய் லீற்றர் 12 ரூபா 50 சதமாக விற்கப்படுகிறதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது மண்ணெண்ணெய்ப் பவுசர்கள் கைவசம் இல்லாததால் தனிப்பட்ட வியாபாரிகளை ஊக்குவித்தே யாழ் மாவட்டத்திற்கு மண்ணெண்ணெய் கொண்டுவர வேண்டியிருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (66)

## வீடு பார்க்கச் சென்றவர் இன்னும் திரும்பவில்லை

நேற்று முன்தினம் காலையில் மல்லாகத்தில் இருந்து கட்டுவன் உப தபாற் கந்தோருக்கு அருகாமையில் உள்ள தனது வீட்டினைப் பார்க்கச் சென்ற இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தரான க தங்கராசா என்பவர் இன்னும் வீடுதிரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பலாலியில் இருந்து இராணுவம் இப்பகுதிக்கூடாகவே காங்கேசன்துறை நோக்கி வந்தபடியால் இராணுவத்தினரிடம் இவர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. (ப10)

### கந்த சஷ்டி சிந்தனை - 5

## கிழவன் என்று சொல்லலாமா?

கடைச்சங்கத்துத் தலைமைப் புலவராய் வீற்றிருந்தவர் நக்கீரர். அவர் பாடிய நூல் திருமுருகாற்றுப்படை.

வள்ளல் ஒருவனிடத்துச் சென்று பரிசு பெற்றான் ஒருவன், பொருள் நாடிச் செல்லும் மற்றொருவனை அவ்வள்ளலை அணுகுமாறு வழிப்படுத்துதல் ஆற்றுப்படை என்ற இலக்கியவகை.

முருகன் அருள்பெற்ற நக்கீரர், அவன் அருள்பெறக் கருதி நிற்கும் புலவர் ஒருவரை முருகனிடத்து ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது திருமுருகாற்றுப்படை.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் படைவீடுகள் ஆறிலும் முருகன் எழுந்தருளியிருக்கும் சிறப்பை பேசும் இந்நூல் 'பழமுதிர்சோலை மலைகிழவோனே' என்று நிறைவு பெறுகிறது.

'கிழவன்', 'கிழான்' என்ற சொற்களுக்கு உரியவன் என்று ஒரு பொருளுண்டு. குறிஞ்சிக்கிழவன் என்ற தொடர், குறிஞ்சி நிலத்துக்கு, உரியவன் என்ற கருத்தில் முருகனைக் குறிக்கும்.

அருணகிரியாருக்கு நக்கீரர்பால் மிகுந்த மரியாதை; ஈடுபாடு. படைவீடுடைய பிரமனைப்பாடுவதற்கு இவருக்கு வழிகாட்டியவர் அவரே.

அன்பு மிகுதியால் அருணகிரியார் நக்கீரரை இகழ்பவர் போல் புகழ்கிறார்:

முருகன் எப்படிப்பட்ட குழந்தை?

அகிலாண்ட கோடியீன்ற அன்னை உமையின் திருமுலைப்பால் அருந்திய குழந்தை!

சரவணப் பொய்கையிலே தாமரைப் பூந்தொட்டிலில் ஏறிய குழந்தை!

தன்னை வளர்த்த கார்த்திகைப் பெண்களின் பாலுக்காக அழுத குழந்தை!

இந்தக் குழந்தை அழுததால் என்ன நடந்தது தெரியுமா?

சூரன் அழுதான் - தனக்கு முடிவு வரப்போவதை உணர்ந்து!

கடல் அழுதது - முருகன் திருக்கைவேல் தன்மீது ஏவப்பட்டு தான் வற்றப் போவதை அறிந்து!

கிரௌஞ்சமலை அழுதது - தான் வேலால் பிளக்கப் படப் போவதற்கு அஞ்சி!

இவ்வளவும் நிகழக்கூடியதாக விம்மி விம்மியழும் இந்தப் பச்சைக் குருத்தையைப்போய் உலகம் கிழவன் என்று சொல்லுகிறதே, இஃது என்ன அறியாமை!

''திருந்தப் புவனங்கள் ஈன்றபொற்பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதும் குவலயமே''

'கிழவன்' என்ற சிலேடைப் பிரயோகமும் நக்கீரரைப் பேர் குறிப்பிடாது சொன்ன உத்தியும் நினைந்து நினைந்து இன்புறத்தக்கவை.

### இது ஒரு போர்க்கால அழைப்பு

வாசக நேயர்களே!

இது சரித்திரம் எழுதப்படும் சமயம். நம்மைச் சுற்றி, பலமுனைகளில், உக்கிரமான போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது அனைவரையும் பாதிக்கிறது.

ஒவ்வொருவரும் போரை ஒவ்வொரு கோணத்தில் பார்ப்பீர்கள்!

ஆயிரம் அனுபவங்கள், தழும்புகள், இழப்புக்கள்!

எங்கே, உங்கள் அயலில், உங்கள் சூழலில் நடைபெறும் சம்பவங்களுக்கு உயிரோட்டமுள்ள எழுத்துருவம் கொடுங்கள் பார்க்கலாம்!

வாசிப்பவர் மனதைக் கௌவிப்பிடிக்கக்கூடிய விதத்தில் எழுதுவோருக்கு தகுந்த சன்மானம் வழங்குவதுடன், முரசொலி வேறும் பல வாய்ப்புகள் தரும்.

தங்கள் ஆக்கங்களை எமது அலுவலகத்தில் நேரில் கொண்டு வந்து தரவேண்டும் என்று வேண்டுகிறோம்.

ஆசிரியர்

### 6 மாதம் குவைத்தில் பணிபுரிந்தவர்களின்

# குவைத் டினாரை மாற்றிக்கொடுக்க

# வர்த்தக வங்கிகளுக்குப் பணிப்பு

குவைத் டினாரை ஏற்றுக்கொள்ளுமாறு வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கி பணித்துள்ளது.

இதுவரை குவைத் நாணயமான டினார் இலங்கை வங்கிகளில் ஏற்றுக் கொள்ளப்படாமல இருந்தது.

ஆனால் டினாரை இலங்கை வங்கிகளில் மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள் ஆகக்குறைந்தது ஆறுமாதகாலமாவது குவைத்தில் பணிபுரிந்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒரு டினாரின் பெறுமதி நான்கு ரூபாய்கள் ஆகும்.

## நாளை பாக். பொதுத்தேர்தல் பெனாஸிருக்கு பேராதரவு?

பாகிஸ்தான் பொதுத்தேர்தலுக்கு இன்னமும் ஒரு நாள் மட்டுமே உள்ளது என்பதால் பிரசாரங்கள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் திருமதி பெனாஸிர் பூட்டோ தனது பாகிஸ்தான் மக்கள் கட்சிதான் இன்னமும் செல்வாக்குடன் உள்ளது எனக்கூறியுள்ளார்.

அவருக்கும் அவரது கட்சித் தலைவர்களுக்கும் எதிரான ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணை மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அவர் பேசும் கூட்டங்களுக்கு மக்கள் பெருந்திரளாகக் கூடுகிறார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## முல்லை மாவட்ட தபாலக ஊழியர்க்கு....

இதுவரை வேலைக்கு சமுகமளிக்காத முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல தபாற்கந்தோர் உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் உடன் வேலைக்கு சமுகமளிக்குமாறு முல்லைமாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. சு. பரராசசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலைக்கு வரத் தவறுபவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (33)

### சென்னையிலிருந்து சிங்கப்பூர்

## சிதம்பரத்தின் பணியை விக்னேஸ்வரா நிறைவேற்றுகிறது

எம். எஸ், சிதம்பரத்தின் பணியைத் தற்போது எம். எஸ். விக்னேஸ்வரா நிறைவேற்றுகிறது.

சென்னை - சிங்கப்பூர் பயணிகள் கப்பற்சேவையில் தான் இந்தப் பணி நடைபெறுகின்றது.

முன்னர் சென்னை- சிங்கப்பூர் பயணிகள் கப்பற்சேவையில் எம். எஸ். சிதம்பரம் என்ற குளிரூட்டப்பட்ட ஆடம்பரக்கப்பல் ஈடுபடுத்தப்பட்டுவந்தது.

1983- ம் ஆண்டு இனக் கலவரகாலத்தின்போது கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்குத் தமிழ் மக்களை ஏற்றி வரும் பணியை இந்த எம். எஸ். சிதம்பரமே நிறைவேற்றியது.

1988- ம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்து சென்னையை நோக்கி வந்துகொண்டிருக்கையில் எம். எஸ், சிதம்பரம் நடுவழியில் தீக்கிரையாகிக் கரைக்குக் கொண்டுவரப்பட்டுச் சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டது.

அத்துடன் சிங்கப்பூர்- சென்னைப் பயணிகள் கப்பற் சேவையும் இந்திய அரசினால் நிறுத்தப்பட்டது தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவையில் எம். எஸ். விக்னேஸ்வரா என்ற குளிரூட்டப்பட்ட கப்பல் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இக்கப்பலில் 800 பயணிகளையும், 1000 தொன் பொதிகளையும் ஏற்றிச்செல்ல முடியும், சென்னையிலிருந்து நாலரை நாட்களில் சிங்கப்பூரை இது சென்றடையும்.


### சிறுவிளம்பரம்

**சேவை**

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரட்பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும் (காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12 00 மணி வரை), பாஸ்போட், அடையாள அட்டை, புகைப்படங்கள் (கறுப்பு. வெள்ளைப்படங்கள் மட்டும்)பிடிக்கவும், படங்களை 12'' × 10'' அளவுக்கு பெரிதாக்கவும் (மாலை 2.00 மணி தொடக்கம் 5. 00 மணி வரை) நாட வேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல.351, கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குஅண்மையில்) நல்லூர். 10067

**சேவை**

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாளஅட்டைகளையும் கவரிட்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளீன் கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம், (இந்துமகளிர் கல்லூரிச் சந்திக்கு அருகாமையில்) வேலைநேரம்: காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை. 10084

## அறிவித்தல்

### குரு டீசல் எஞ்ஜினியர்ஸ்

மேற்படி எமது ஸ்தாபனம் இல. 50, கோவில் வீதி, கொக்குவில் என்னும் விலாசத்திற்கு இடமாற்றப்பட்டு இயங்கி வருகின்றது என எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்
10102


### தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## இடம்பெயர்ந்த மக்களுக்கு விசேட உணவு விநியோகம்

அண்மையில் இடம்பெயர்ந்து வெளியிடங்களில் தஞ்சமடைந்துள்ள தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கப் பாவனையாளர்களுக்கு விசேட உலர் உணவு வழங்க இணுவில் மஞ்சத்தடி நெசவு நிலையத்தில் ஒரு பிரத்தியேகக் கிளை நிலையம் 22. 10. 90 ஆம் திகதி திறக்கப்பட்டிருக்கிறது.

எமது சங்கப் பாவனையாளர் எமது சங்கம் வழங்கிய கொள்வனவு அட்டைகளை கொண்டு வந்து இவ்விசேட உலர் உணவு நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சி. சிவமகாராசா
தலைவர்
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

1990. 10. 21

10103

# முரசொலி

## எமது சிந்தனை

1990 - 10 - 23 செவ்வாய்

''அன்பைத் தளமாகக் கொள்ளாத, அறிவால் வழிநடத்தப்படாத, எல்லா அரசுகளும் அதிகாரப் பிரயோகமும் - அவை எவ்வடிவினவாயினும் - கொடுங்கோலே''

- அனா ஜேம்ஸன்

# சிலநேரங்களில் சில உண்மைகள்

ஹப்புத்தளையில் ஒரு தாது கோபத்தின் கலசத்தைத் திறந்து வைத்துப் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸ சில உண்மைகளை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

புனித சூழல் ஏற்படுத்திய சிலிர்ப்போ, தாதுகோபத்தைக் கண்டதால் ஏற்பட்ட பரவசமோ - அது போன்ற அமைப்பு வேறெங்கும் இல்லையாம் - மனந்திறந்து பேசியிருக்கிறார் ஜனாதிபதி.

''தேர்தலில் வெற்றி பெறுபவரைச் சுற்றி ஒரு கூட்டம் அலைவதும், அக்கூட்டத்துக்குப் பதவிகளும் சலுகைகளும் வழங்குவதில் எம். பி. யின் பொழுது கழிவதுமே இங்கு நடந்தவை. இதனால் விரக்தியடைந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்!''

மாறி மாறி நாட்டை ஆண்ட அரசியற்கட்சிகள் இரண்டும் தகுதிக்கு முன்னுரிமை தரத்தவறின. அமைச்சின் செயலாளர் தொடக்கம் சிற்றூழியர் வரை கையாட்களே நியமனம் பெற்றனர். ஆளும் கட்சி அமைப்பாளர்கள் எம். பிக்களைவிட அதிக செல்வாக்குப் பெற்றிருந்தனர். நியமனங்கள் பத்தென்றும் பதினைந்தென்றும் விலைபோயின!

இத்தனையும் ஜனநாயகம் நிலவுவதாகப் பறைசாற்றும் ஒரு நாட்டில் நடந்து வந்தது. ஜனநாயகத்தையே கொச்சைப்படுத்தி, கீழ்த்தரமான அரசியல் ஆதாயம் தேடியிருக்கிறார்கள் ஆட்சியைப் பிடித்தவர்கள்.

ஆனால், தற்பொழுது நிலைமைமாறி நீதியான சமுதாயம் உருவாகியுள்ளது என்ற திருப்தியோடு பேசியிருக்கிறார் பிரேமதாஸ.

இனவிகிதாசார அடிப்படையிலான தெரிவு கூட தமிழருக்கு இன்னும் எட்டாப்பழமாகவே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, ஜனாதிபதிக்கிருக்கும் அற்ப சொற்ப நிம்மதியையும் பறிப்பது எமது நோக்கமல்ல.

சிங்கள இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. உயர் கல்வி வாய்ப்பும் அதிகம். தாய்மொழியைத் தவிர வேறு மொழியில் தேர்ச்சி அடையவேண்டும் என்று நிர்ப்பந்தம் அவர்களுக்கில்லை. அவர்கள் மதமாகிய பௌத்தம் அரசாங்க மதமாக விளங்குகிறது. அவர்கள் சாரும் அரசியற் கட்சிகள் பதவிக்கு வருவது நிச்சயம்.

மக்கள் ஆதரவு கிடைத்தால் அவர்களுள் ஒருவர் பிரதம மந்திரியாகவோ ஜனாதிபதியாகவோ வருவதற்குத் தடையில்லை. சாமானியர்களாகத் தமது அரசியல் வாழ்வைத் தொடங்கிய விஜயானந்த தஹநாயக்காவும், றணசிங்ஹ பிரேமதாஸவும் முறையே, பிரதம மந்திரியாகவும் ஜனாதிபதியாகவும் வர முடிந்தது. (தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வருவதையே சகிக்காத நாடு இது!)

இவ்வளவும் இருந்தும்—ஒருமுறையல்ல, இருமுறை—போர்க்கொடி உயர்த்தினார்கள் அவர்கள்—ஜே. வி. பியினர்!

சிங்கள இளைஞர்களின் வேதனையை, மனப் புழுக்கத்தை, விரக்தியைப் புரிந்து கொள்ளும் மாண்புமிகு ஜனாதிபதி, இந்நாட்டில் தமிழ் இளைஞர்கள் அனுபவிக்கும் உரிமைகள்பற்றி, ஒரு கணம், அந்தரங்க சுத்தியோடு நினைத்துப் பார்ப்பாரானால், அவர்கள் ஏன் அயுதம் ஏந்தவேண்டி வந்ததென்பதை இலகுவில் புரிந்துகொள்வார்.

திறமை வாய்ந்த மாணவர்களை மட்டந்தட்ட வென்றே தரப்படுத்தல், வேலைவாய்ப்பில் புறக்கணிப்பு, தமிழராய்ப் பிறந்தமையால் ஆயுதப்படையினரின் சந்தேகத்துக்கும் இம்சைக்கும் ஆளாதலும், 'காணாமற்போத'லும் என எத்தனை துன்பங்கள் இந்த நாட்டிலே!

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஜனநாயக வழியில், பாராளுமன்றம் மூலமாக, நீதிமன்றம் மூலமாக ஒத்துழையாமை மூலமாக எல்லாம், நமது தலைவர்கள் உரிமை கேட்டு அலுத்துச் சலித்துப்போய் விட்ட இடத்திலிருந்து இளைஞர்கள் தொடங்கினார்கள்.

முந்திய தலைமுறையினரைப்போல அவர்கள் ஏமாற மறுக்கிறார்கள். சிங்கள அரசாங்கங்கள் பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் மனப்பூர்வமாக எதையும் வழங்காது, காலங்கடத்துவதிலும் இழுத்தடிப்பதிலுமே கண்ணாயிருந்தன. ஓராண்டாகப் பேச்சுவார்த்தை நடத்திய விடுதலைப் புலிகளும் இதையே சொல்கிறார்கள்.

சிங்கள இளைஞர்களைப் புரிந்துகொள்ளும் ஜனாதிபதி தமிழ் இளைஞர்களையும் புரிந்துகொளள — மனமார —முயலவேண்டும்.

அவர்கள் எதிர்பார்ப்பது வாக்குறுதிகளை அல்ல; நீதியை!

### கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்தஊழியர்சங்கம் கோரிக்லை

# 1987-ல் சிங்கள ஊழியருக்கு வழங்கப்பட்ட சலுகை

# தமிழ் ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்

1987-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30-ம் திகதி ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது இடம் பெயர்ந்த சிங்களவருக்கு கொடுக்கப்பட்ட சம்பளத்துடனான விடுமுறையும், சலுகைகளும் தமக்கும் வழங்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த ஊழியர் சங்கம் அரசைக் கேட்டுள்ளது.

வடக்கு,கிழக்கிலிருந்து 1987-ம்ஆண்டு இனக்கலவரத்தில் இடம்பெயர்ந்த சிங்கள ஊழியர்கள் தென்மாகாணத்தில் கடமைபுரிய அரசு விசேட அனுமதிவழங்கியிருந்தது. அதேபோன்று கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள அரச ஊழியர்கள் வடக்கில் கடமைபுரிய அனுமதி வழங்கவேண்டுமெனவும் இச் சங்கம் கேட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய உதவிகளையும் வழங்கவேண்டுமெனவும் கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த ஊழியர் சங்கம் அரசைக் கேட்டுள்ளது.

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்த ஊழியர் சங்கத்தின் தலைவராக ச. தர்மபாலனும், உப தலைவராக இ. மாசிலாமணியும், செயலாளராக சோ. சுந்தரராஜாவும், உப. செயலாளராக கு. குணவதியும், செயற்குழு உறுப்பினராக சு. சதாசிவமும், ஆலோசகராக ஆர். கலியுக வரதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இச் சங்கத்தின் அடுத்த கூட்டம் நல்லூர் சாதனா பாடசாலையில் அடுத்த மாதம் 4-ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

### பத்திரிகையாளருக்கு ஒய்வூதியம்

பத்திரிகையாளர்களுக்குஓய்வூதியம் வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம்தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான திட்டம் தயாரிப்பது சம்பந்தமாக பத்திரிகையாளர்சங்கப் பிரதிநிதிகளை தொழிலமைச்சர் பிரேமச்சந்திரா இன்று பாராளுமன்ற கமிட்டி அறையில் சந்தித்து ஆராயவுள்ளார்.

### சாராயம் கைப்பற்றப்பட்டது

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் வழியாக வரும் வியாபாரிகளும் பொதுமக்களும் களவாகக் கொண்டு சென்ற சாராயப் போத்தல்கள் புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டன.

நொச்சிமோட்டையில் விடுதலைப்புலிகள் அமைத்திருந்த தடைமுகாமிலேயே இச் சாராயப் போத்தல்கள் பிடிபட்டன.

### கிளிநொச்சியில் இப்படியொரு தொல்லை

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் பிரதான வீதி பக்கத்தில் உமிகொட்டி தீமூட்டி விடுவதால் பயணிகள் பெரும் அவஸ்தைக்குள்ளாகின்றனர்.

நகரின் மத்தியில் அமைந்துள்ள பழைய பஸ்நிலையத்திற்கு சமீபமாக அரிசிஆலை உரிமையாளர்கள் உமிகுவித்து தீமூட்டுவதால் அதிகளவில் வெளியாகும் புகையால் பிரதானவீதியும், அப்பகுதியும் புகைமண்டலமாக காட்சியளிக்கிறது. (35)

### ஹெலியில் இருந்து பத்திரிகைகள் பிரசுரங்கள்

பண்டத்தரிப்பு, விளான் பகுதியில் ஹெலிக்கொப்டரில் இருந்து லேக்கவுஸ் பத்திரிகைகள் வீசப்பட்டன.

இதே வேளை மானிப்பாய், கட்டுடைப் பகுதிகளில் சிறிய துண்டுப் பிரசுரங்களும் வீசப்பட்டன. (ப-11)

### வெற்றிலைக்கு கிராக்கி

தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கருகம்பானைப் பகுதிகளில் உள்ள வெற்றிலை பயிரிடுவோர் இடம்பெயர்ந்துள்ளதால் வெற்றிலைக்குச் சந்தைகளில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (1 ப)

# திருநெல்வேலி அரச பண்ணையில் விதை தானியம் விநியோகம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரசினர் விவசாயப் பண்ணையில் விவசாயிகளுக்குத்தேவையான மரக்கறி விதைகள், நாற்றுக்கள், பழக்கன்றுகள், விநியோகிக்கப்பட்டு வருவதாக யாழ்மாவட்டவிவசாய உதவிப்பணிப்பாளர் தா. குணரத்தினம் தெரிவித்தார்.

யாழ்மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்களிலும், தென்னந்தோட்டங்களிலும் மழைகாலப்பயிராக சணல், கடலை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் விவசாயிகளுக்கான மரக்கறி விதைகள், மரக்கன்றுகள் போன்றவற்றை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசினர் விவசாயப் பண்ணையில் இருந்து கூடுதலாகப் பெற்று விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (33)

### புதுமணத் தம்பதிக்கு

# 'அனுபவம் புதுமை' ஹெலி மூலம் கிடைத்தது

புதுமணத் தம்பதி வந்த மினிபஸ் ஒன்றை நோக்கி ஹெலியில் இருந்து கலிபர்த் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் ஒன்று வெள்ளி காலை 8 மணியளவில் அளவெட்டியில் நடந்துள்ளது.

அளவெட்டியில் மணமகள் இல்லத்திலிருந்து பண்டத்தரிப்பு செட்டிக்குறிச்சி மணமகன் இல்லத்திற்கு தம்பதி மினிபஸ் ஒன்றில் அழைத்து வரப்பட்டபோதே அளவெட்டியில் ரோந்தில் ஈடுபட்ட ஹெலி தாக்குதல் நடத்தியது.

இச்சம்பவத்தில் சாரதியின் சாதுரியத்தினால் எவரும் காயமடையாது தப்பிக் கொண்டனர். (ப-30)

### முல்லை. மாவட்டத்திற்கு

# வவுனியா களஞ்சியம் மூலம் உணவுதருவிக்கநடவடிக்கை

வவுனியாவில் உணவுக் களஞ்சியத்தை அமைத்து அதனூடாக கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களைத் தருவிக்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மழைக்காலங்களில் கப்பல் மூலம் உணவுப் பொருட்கள் முல்லைத்தீவுக்கு வந்து சேருவதில் கஷ்ட நிலை ஏற்படுவதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டு இதன் மூலம் உணவுப் பொருட்கள் முல்லைத்தீவுக்கு வந்து சேர உள்ளதாக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் வி. கந்தசாமி தெரிவித்தார். (38)

# முல்லை. அகதி முகாம்களில் 2500 திருமலை அகதிகள்

முல்லைத்தீவில் திருமலை அகதிகள் 2500 பேர் இன்னமும் இருந்து வருகின்றனர்.

இவர்கள் புதுக்குடியிருப்பில் பதின்மூன்று முகாம்களிலும் வற்றாப்பளையில், அம்பலவன் பொக்கனையில் தலா ஒவ்வொரு முகாம்களிலும், குமுளமுனையில் இரு முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

இதே வேளையில் முல்லைத்தீவு அகதிகள் சுமார் 5000 பேர் முத்தையன்கட்டு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், விசுவமடு ஆகிய இடங்களில் அகதிகளாக இருந்து வருகின்றனர். முல்லைத்தீவு அகதிகளுக்கு வாராந்தம் உலர் உணவு வழங்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் நடவடிக்கைஎடுத்து வருகிறார். (38)

## இவர்கள் கரிசனையில்லை

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள வயல் சொந்தக்காரர்கள் வயல்களில் விதைப்பு வேலை ஆரம்பிப்பதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

வயல்களை உழுவதற்கு உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள தட்டுப்பாடு விதைநெல் கமநல சேவை நிலையங்களால் உரிய காலத்தில் வழங்கப்படாமை, நெற் பயிர்களுக்கு வேண்டிய உரம் கிருமிநாசினி வகைகளுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட தட்டுப்பாடு ஆகியவைகளே விதைப்பு வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமைக்குக் காரணமெனக் கருதப்படுகிறது. (18)

## வடம. கிழக்கில் கிளினிக்

வடமராட்சி கிழக்கிலுள்ள கற்பவதிகள், குழந்தைகள் ஆகியோரின் நலன் கருதி மருதன்கேணி கிராமிய வைத்தியசாலையில் மாதத்தின் முதலாம், மூன்றாம் புதன்கிழமைகளில் இவர்களுக்கான கிளினிக் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது. (18)

# வலிகாமம் பகுதியில் பல பாடசாலைகள் சேதம்

வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத் தாக்குதல்களினால் முக்கிய கல்லூரிகள் பல மீண்டும் மோசமான சேதத்துக்குள்ளாகியுள்ளன.

1988க்கு முன் இடம்பெற்ற ஸ்ரீலங்கா, இந்தியப் படைகளின் நடவடிக்கையின் போது பெரும் பாதிப்படைந்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மீளத்திருத்தப்பட்ட இக்கல்லூரிகள் மீண்டும் பழைய 'இடிபாடு' நிலைக்கு வந்துள்ளன,

மல்லாகம் மகாவித்தியாலயம், வயாவிளான் மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி. வீமன்காமம் மகா வித்தியாலயம், காங்கேசன்துறை மகா வித்தியாலயம், மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம், பலாலி சித்திவினாயகர் வித்தியாலயம், பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், ஊறணி கனிஷ்ட வித்தியாலயம், காங்கேசன் துறை நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாலயம், மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம், குரும்பசிட்டி பொன்பரமானந்த மகா வித்தியாலயம், கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் என்பனவே இவ்வாறு பாதிப்படைந்தவைகளாகும்.

இவைதவிர பல பாடசாலைகள் சாதாரண பாதிப்படைந்துள்ளன,

இவற்றில் பல பாடசாலைகளின் கட்டிடங்கள் ஆசிய அபிவிருத்தியின் நிதியுதவியுடன் அரை குறையாகக் கட்டி முடிக்கப்படாத நிலையிலும் சேதத்திற்குள்ளாகியுள் ளன. (32)

# அச்சுவேலி ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் அவதி

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் சேவைகள் அண்மைக்காலத்தில் மிக மோசமாகி வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அண்மையில் பொம்மர்களைக் கண்டு ''சேலைன்'' ஏற்றப்பட்ட நோயாளியைக் கட்டிலில் அப்படியே விட்டு விட்டுடாக்டர்கள் ஓடிவிட்டனர். அச்சுவேலிச்சந்தையில் விமானத் தாக்குதல் இடம்பெற்ற காரணத்தால் மூன்றுநாட்கள் இவ் வைத்தியசாலை மூடப்பட்டது. ஷெல் தாக்குதல் நடைபெறும் என்று இரவில் எந்த வைத்தியரும் இங்கு இருப்பதில்லை. நேற்று முன்தினம் பகல் 10 மணியளவில் இங்கு வந்த பெண் வைத்தியர் அதிக நோயாளிகள் இருப்பதைக் கண்டு அவர்களிடம் எரிந்து விழுந்தது மட்டுமல்ல ஊரடங்கு நேரம் வைத்தியசாலைக்கு வரவேண்டிய தேவை தமக்கு இல்லை என்று கூறி மருந்து கொடுக்க மறுத்துள்ளார். ஓர் இரவு கர்ப்பிணித்தாய் ஒருவர் பிரசவத்துக்காக வந்தபோது திருப்பி அனுப்பப்பட்டார். (32)

# கிளிநொச்சி ஆசிரியர்களுக்கு இம்மாதச் சம்பளம் கிடைத்தது

கிளிநொச்சி ஆசிரியர்களின் இம் மாதச் சம்பளம் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சிக் கல்வித்திணைக்கள நிதி உதவியாளர் திரு. ஜெயப்பிரகாசம் தெரிவித்தார்.

இம்மாதச்சம்பளத்துடன் கடந்த ஐப்பசி மாதத்துக்குரிய ஊக்குவிப்புப் பணமும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு இம் மாதச் சம்பளத்தைப் பெறுமாறு அவர் கேட்டுள்ளார்.

## வவுனியா ஆசிரியர்கள் சம்பளம்

வவுனியா ஆசிரியர்களின் இம் மாதச் சம்பளம் பணமாக வழங்கப்பட்டுள்ளதாக இத் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சென்ற மாதச் சம்பளத்துடன் 1989 ஆடி மாதத்திலிருந்து 1989 மார்கழி வரையுள்ள ஊக்குவிப்புப் பணமும் மொத்தமாக வவுனியா ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ் வங்கி ட்ராப்டுக்களை வவுனியாவில் மாற்ற நடவடிக்கை

யாழ் மாவட்ட வங்கிகளினால் வழங்கப்படும் ''ட்ராப்டுக்களை'' வவுனியா வங்கிகளில் மாற்றுதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ் இலங்கை வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட வங்கிகளில் தற்பொழுது பணப்புழக்கம் குறைந்துள்ளதால் ட்ராப்டுக்களை வைத்திருப்பவர்களின் நன்மை கருதி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்மாவட்ட லங்கிகளுக்கு கப்பல் மூலம் குறிக்கப்பட்ட அளவு பணம் கொண்டு வரப்படும் என்றும், இப் பணத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுப்பனவுகள் செய்ய முடியும் எனவும் அவர் தெ. வித்தார். (70 - 74)

## வவுனியா கல்வித் திணைக்களம் பழைய இடத்தில்

வவுனியா கல்வித் திணைக்களம் அண்மையில் பிரச்சினை காரணமாக இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

கடந்த வாரம் முதல் மீண்டும் பழைய இடத்தில் அது இயங்கத் தொடங்கியுள்ளது. (ப-17)

## துயர்துடைப்புச் சங்கம் மக்களுக்கு உதவி

மன்னார் துயர் துடைப்பு மறு வாழ்வுச் சங்கம் மன்னார் மாவட்டத்தில் நியாய விலையில் உணவுப்பொருட்களை விற்று வருகிறது.

யூன் மாதம் முதல் நடைபெற்று வரும் அசம்பாவிதங்கள் காரணமாக மன்னார் மாவட்டத்தில் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு இச்சங்கம் கொழும்பில் இருந்து பொருட்களைத் தருவித்து நியாய விலையில் விற்கத் தொடங்கியது. பல சிரமத்தின் மத்தியில் கடல் வழியாக மன்னார் குரு முதல்வர் வணபிதா சேவியர் குரூஸ் அடிகன் பொருட்களை மன்னாருக்கு எடுத்து வந்தார். (17)

## தெல்லிப்பழை - சங்கானை

# ஆஸ்பத்திரி ஊழியர்களிடம் மனக்கசப்பு நிலவுகிறது

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அங்கே இருதரப்பு ஊழியர்களுக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகத் தெல்லிப்பழை ஆஸ்பத்திரி ஊழியர்கள் ஒரு விருந்தினர் போன்ற உணர்வுடன் இங்கு செயற்படுகிறார்களாம். (ப-03)

## வழக்கம்பரையில் இளை நிலையம்

சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுகளில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்காகத் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் வழக்கம் பரை அம்மன் கோவிலடியில் விசேட உணவு விநியோக நிலையம் ஒன்றை இன்று திறக்கவுள்ளது.

## ஆஸ்பத்திரியில் மரணம்

மல்லாகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அவ்ரோ விமான பீப்பாய்க் குண்டு வீச்சினால் தலையில் படுகாயமடைந்து மாளிப்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த எஸ். சுப்பிரமணியம் (38- பொல்காவலை) நேற்று முன்தினம் மரணமானார். (ப-11)

### வானத்தாக்குதல்...

மனப்பான்மையோடு செயற்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (66)

### சீமெந்து...

முயற்சியும் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப்பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் நான்கு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

நேற்று காங்கேசன் துறையில் நடைபெற்றமோதல்களில் ராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாலையில் விமானங்கள் அடிக்கடி பலாலி வந்து சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (ப-10,48)

### யாழ்...

மெயின் சுவிட்ச், றிப் சுவிட்ச், சுவிட்ச் என்பனவும் திருடப்பட்டுள்ளன.

வைத்தியசாலையை மீண்டும் இயங்கவைக்கத்தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் சமயத்தில் இத்தகைய திருட்டுக்கள் பலரையும் கவலையடையச் செய்துள்ளன. (70, 74)

### நேற்றுக்காலை...

சுவாமி ஆலயத்தின் சிலஇடங்களும் சேதமடைந்து காணப்பட்டதுடன் வாகனக் கொம்பும் முறிந்து காணப்பட்டது. இதற்கு முன்பாகவிருந்த சன சமூகநிலையமும் சேதமடைந்துள்ளது.

நடேசப்பெருமாள் என்பவருடைய வீடும் சேதமடைந்த நிலையிலுள்ளது. (ப11-23)

### பணியாளர்க்கு

26-ம் திகதி வெள்ளிக்கிழமை ஐப்பசி மாதசம்பளக்கொடுப்பனவுகள் தொடர்பாகக் கலந்தாலோசிப்பதற்காக தவறாது சமூகமளிக்குமாறு துணைவேந்தர் கேட்டுக் கொள்கிறார்.

# உணவுப்பங்கீட்டுவிநியோகம் 26ஆம் திகதிவரை நீடிப்பு

தற்போது நடைமுறையிலுள்ள இடம்பெயர்ந்தோருக்கான 3-ம் கட்டவிநியோகமும், தொழில் இழந்தோர், 1500/-க்கு மேல் வருமானம் பெறுவோர் ஆகியோருக்கான 2-ம் கட்ட விநியோகம் நேற்றுடன் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பல கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இவ்விநியோகம் முற்றுப் பெறாத காரணத்தால் இம் மாதம் 26-ந் திகதி வரை இவ் விநியோகத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பதாக யாழ் கச்சேரி வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கப்பல்களில் இருந்து போதியளவு உணவுப் பொருட்கள் கிடைக்கப்பெற்றதும்4-ம், 5-ம் கட்ட உணவுப்பொருட்கள் ஒரே முறையில் வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (66)

# மட்டக்களப்பில் ராணுவத்தினர் பொதுமக்கள் மீது வன்முறை

கடந்த சனி மட்டக்களப்பு மாவட்டம் கிரான்குளம் பகுதியைச்சுற்றிவளைத்த ராணுவத்தினர் சுமார் 100 பொதுமக்களைக் கைதுசெய்து கொண்டு சென்றனர். இவர்களில் நால்வர் கொல்லப்பட்டனர், ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

ஞாயிறன்று நீலாவணைத் துறையில் இருந்து சென்ற படகுமீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பத்துப் பிள்ளைகளின் தந்தையானசீனிதம்பிமுருகுப்பிள்ளை (46) கொல்லப்பட்டார்.

இதே சமயம் தளவாய்ப் பகுதியில் ராணுவத்தினரும் ஊர்காவற் படையினரும் காளிகுட்டி இந்திரா என்ற பெண்ணை மானபங்கம் செய்துள்ளனர்.

# யாழ் செயலகத்தில் பல பகுதி மழை நீரில் மூழ்கியுள்ளது

யாழ் அரசாங்க அதிபர் செயலகமும் இங்கே இயங்கும் மற்றும் பல உயர் அதிகாரிகளின் அலுவலகமும் நீரில் மூழ்கியுள்ளன.

கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்ற குண்டு வீச்சுக் காரணமாக செயலகக் கட்டிட கூரைப்பகுதி சேதமடைந்தமை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

திருத்த வேலைகளை மேற்கொள்ள செயலகத்தில் போதிய நிதி வசதி இல்லை எனவும்அறியப்படுகிறது (66)

## பிற இடங்களுக்கு இடம் பெயர்வு

கேரதீவு - சங்குப்பிட்டி பாதை வழியாக வலிகாமப் பகுதி மக்கள் பிறமாவட்டங்களுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்துசெல்வதைக்காணக் கூடியதாகவுள்ளது.

குழந்தைகள் முதல் முதியோர் வரை கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் வள்ளங்களில் ஏறி அவர்கள் குடாநாட்டை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு செல்கிறார் கள் (ப32)

### சிகிரியா..

சிலுவைச் சங்கத்திற்கு 10 பரல் டீசலும் கொண்டுவரப்பட்டன.

மேலும் 1700 தொன் உலர் உணவுப் பொருட்களுடன் லங்காசிறி இன்று வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (ப-11)

## மணி ஓசை

குருநகரில் மீண்டும் ஆலயங்களில் மணி ஓசை ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

இங்குள்ள புனித யாகப்பர் ஆலயம், புதுமை மாதா ஆலயம், சம்பேதுருவானவர் ஆலயம் என்பன மும்முனைத் தாக்குதல் காரணமாக பாரிய சேதமடைந்தன. இதனால் தேவாலயத்தை அண்டிய பகுதியில் உள்ள மக்களும் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது.

தற்போது மக்கள் மீண்டும் தமது பழைய இடங்களில் குடியேறி வருகின்றனர். புனித யாகப்பர் ஆலயத்தில் உடைந்து விழுந்த கூரை வேலைகள் தற்சமயம் நடைபெறுகின்றன. அதிகாலை பூசைப்பலியும் பங்குத்தந்தை இம்மானுவேல் அடிகளாரினால் கோயிலில் ஒப்புக் கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதேசமயம் மற்றைய ஆலயங்களிலும் பூசைப்பலி ஒப்புக் கொடுப்பதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ப-17)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 23 10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.